ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

**அரசு கடிதம் (நிலை)எண்.78/ஆதிந7/2023, நாள் 26.06.2023**

அனுப்புநர்
திருமதி க. லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை - 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 5.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை–18/35 (பெயரில்)

அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர் நலத் துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் விடுதி காப்பாளர்களுக்கு 2023-2024-ஆம் ஆண்டில் கலந்தாய்வு முறையிலான பொது மாறுதல் – கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை

1. அரசாணை (ப) எண். 162, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7)துறை, நாள் 16.11.2021
2. அரசாணை (ப) எண். 213, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7)துறை, நாள் 13.10.2022
3. இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.எ1/13829/2023, நாள் 08.06.2023.

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின்மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 3-இல் காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில், பார்வை 2-இல் காணும் அரசாணையில், 2022-2023-ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணையவழியிலும் விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்களுக்கு இயன் முறையிலும் (நேரடி) பொது மாறுதல் நடத்திட அரசாணை பெறப்பட்டது எனவும், ஆனால், 2022-2023 ஆம் கல்வியாண்டில் இடைப்பட்ட காலத்தில் (அக்டோபர்) பொது மாறுதல் நடத்தப்பட்டால் மாணாக்கரின் கல்வி நலன் பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு பொது மாறுதல் கலந்தாய்வுகள்

நடத்தப்படவில்லை. எனவே, 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான இத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணைய வழியிலும் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்களுக்கு இயன் முறையிலும் கலந்தாய்வு முறையில் பொது மாறுதல்கள் நடத்திட கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்குமாறும், மேலும், பொது மாறுதல் நடத்துவதற்கு ரூ.1,47,500/- நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில், 2023-2024-ஆம் கல்வியாண்டிற்கான ஆதிதிராவிடர் நலப் பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு பொது மாறுதல்களை online மூலமாகவும் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்களுக்கான பொது மாறுதல்களை நிர்வாகக் காரணம் கருதி நேரடியாகவும் நடத்திட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலும், இக்கலந்தாய்வு பொது மாறுதலின்போது இணைப்பில் உள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. 2023-2024-ஆம் கல்வியாண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வு நடத்திட, தேவைப்படும் ரூ.1,47,500/-யினை ஆதிதிராவிடர் நல இயக்குநரக சில்லறை செலவின கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிலிருந்து செலவினம் மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர், ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், கணினி பயிற்றுநர், பட்டதாரி ஆசிரயர், தமிழ் ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர். இடைநிலை ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் ஆகியோருக்கான பொது மாறுதல் கலந்தாய்வை online மூலம் நடத்திடவும், இடைநிலை / பட்டதாரி காப்பாளர்களுக்கு நேரடி கலந்தாய்வு முறையிலும், கலந்தாய்வு நடத்தி பணியிட மாறுதல் வழங்கவும் ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

7. ஆதிதிராவிடர் நலப் பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்தாய்வை முடித்த பின்னர், பணி நிரவலை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், மாணக்கரின் கல்வி நலன் பாதிக்காத வண்ணம் பொது கலந்தாய்வு மாறுதல் குறித்த கால அட்டவணையை தயார் செய்து, அதன் அடிப்படையில் கலந்தாய்வு பொது மாறுதலை விரைந்து முடிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு தெரிவிக்கப்படுகிறது. அனைத்து பதவிகளுக்குமான கலந்தாய்வுகள் சென்னையில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் தலைமையில் உள்ள குழுவால் கண்காணிக்கப்பட வேண்டும்.

8. அனைத்துப் பதவிகளுக்குமான பொது மாறுதல்கள் குறித்த கலந்தாய்வுப் பணிகளை விரைந்து முடித்து இதுகுறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பவும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

தங்கள் உண்மையுள்ள,

ஜா. தங்கம்
26.6.2023

அரசு செயலாளருக்காக.

நகல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை - 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை செயலரின் தனிச் செயலர்,
சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**அரசு கடிதம் (நிலை) எண். 78/ஆதிந7/2023, நாள் 26.06.2023**
**இணைப்பு**

## 2023-2024 ஆம் கல்வியாண்டு பொது மாறுதல் கலந்தாய்வு தொடர்பான பொதுவான நடைமுறைகள்

1. 38 மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கும் தனியே User ID (பயனர் குறியீடு) மற்றும் Passward (கடவுச்சொல்) தரப்பட வேண்டும்.
2. கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர், காப்பாளர் ஒவ்வொருவரும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட Login-ல் விண்ணப்பங்கள் தனியராலேயே பதிவு செய்யப்பட வேண்டும்.
3. பதியப்பட்ட விண்ணப்பம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் சரிபார்க்கப்பட்டு ஒப்பமிடப்பட்ட நகல் தனியரிடம் வழங்கப்பட வேண்டும்.
4. கலந்தாய்விற்கான காலிப்பணியிடங்கள் மாவட்ட வாரியாக Online Software-ல் பதியப்பட வேண்டும்.

### வழிகாட்டு நெறிமுறைகள்

1) மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றக் கூடாது என்ற பொதுவான ஆணை, ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் பணிபுரியும் பணியிடங்கள் நிர்வாக பணியிடங்கள் அல்ல என்பதால் இந்த ஆணை கடைபிடிக்கப்படுவதில்லை இதே முறை தொடரலாம்.

2) பணி ஓய்வு, பணித்துறப்பு, பணி நீக்கம், பதவி உயர்வு, மரணம் 01.06.2023 அன்றைய நிலையில் ஏற்படும் புதிய பணியிடங்கள் மற்றும் நிர்வாகக் காரணங்கள் போன்ற இனங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மட்டும் பொது மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக எக்காரணம் கொண்டும் மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூடாது.

3) இடைநிலை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியர்/ பட்டதாரி ஆசிரியர் / தமிழ் ஆசிரியர்/ கணினி பயிற்றுநர் / துவக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்/உயர்நிலை/மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் காலிப் பணியிட விவரங்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலக தகவல் பலகையில் கலந்தாய்வு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக ஒட்டப்பட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும். மாவட்ட தேசிய தகவல் மைய இணையதளத்திலும் வெளியிட வேண்டும். கலந்தாய்வு குறித்த செய்தியினை அனைத்து செய்தித் தாள்களிலும் வெளியிடலாம்.

4) காலிப் பணியிடங்களுக்கு மாறுதல் கோரிய ஆசிரியர்கள் தங்களுடைய விவரங்களை இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும். முழுமையான விவரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் கலந்தாய்வுக்கு பரிசீலிக்கப்படக்

கூடாது. மேற்கண்ட விவரங்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும் அலுவலக தகவல் பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

5) மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முன்னுரிமையின்படி பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

a) மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் கோரிக்கைகள்

b) பிற மாவட்டங்களில் இருந்து மாவட்ட மாறுதல் வழங்கி ஒதுக்கீடு செய்யப்படுவோரின் கோரிக்கைகள்

6) பணிக்காலம்

பணிமாறுதல் கோரும் ஆசிரியர்கள் / காப்பாளர்கள் பணிபுரியும் இடத்தில் 31.05.2023 அன்றைய நிலையில் ஓராண்டு கட்டாயம் பணி முடித்திருக்க வேண்டும். 2023-2024 ஆண்டில் நடைபெறும் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள கீழ்க்காணும் பிரிவினர்களுக்கு ஓராண்டு பணிக்காலத்திலிருந்து விலக்களிக்கலாம்.

(a) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோரும்போது

(b) முற்றிலும் கண் பார்வையற்றவர்கள் (Total Blindness)

(c) மூன்று சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள்

(d) இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்

(e) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்.

(f) பணி நிரவல் மூலமாக பிற பள்ளிகளுக்கு மாறுதல் செய்யப்பட்டவர்கள்.

(g) விதவைகள்.

7) ஒரு காலிப் பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட வழி காட்டுதலை பின்பற்றி முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்:-

(a) இந்திய இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன்/மனைவியர்.

(b) முற்றிலும் கண் பார்வையற்றவர் (Total Blindness)

(c) விதவைகள்/40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதுநிலை கன்னியர்.

(d) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு உள்ள மாற்றுத் திறனாளிகள். இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்று கோல் உதவியுடன் (Using Clipers) மெதுவாக செல்லக்கூடிய நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள்

(e) இருதய மாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்

(f) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்.

(g) மனவளர்ச்சி குன்றிய மற்றும் உடல் குறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர்.

(h) 50 விழுக்காட்டிற்கு கீழ் ஊனமுள்ள மாற்றுத் திறனாளிக்களுக்கான சான்றிதழ் பெற்றவர்கள்.

(I) கணவன் மனைவி இருவரும் பணியில் இருக்கும் நேர்வில் அந்த தம்பதியினர் (கணவன்/மனைவி) 30 கி.மீ. சுற்றளவு தூரத்திற்குள் உள்ள இடத்தில் பணிபுரியும் பட்சத்தில் அவர்கள் Separation எனக் கருதி கணவன்/மனைவி முன்னுரிமை அளிக்கப்படமாட்டாது. கணவன்/மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட வேண்டும். இதில் மைய அரசு/மாநில அரசு/பொதுத்துறை நிறுவனம் என்ற பாகுபாடு கிடையாது.

(j) புதியதாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் தவிர ஒரே இடத்தில் குறைந்த பட்சம் ஓராண்டு (01.06.2023 அன்று) அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

8) சிறப்பு நிகழ்வு

கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சிறப்பு நிகழ்வாகக் கருதி மாறுதல் வழங்கலாம்.

9) கலந்தாய்வு (Counselling)

(a) இடைநிலை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியர்/பட்டதாரி ஆசிரியர்/ தமிழ் ஆசிரியர் /காப்பாளர்/ காப்பாளினி / தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் / நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களில் உள்ள ஆசிரியர்/காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களுக்கு, மாவட்ட மாறுதல் மற்றும் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் இதர அனைத்து ஆசிரியர்களுக்கான மாவட்ட மாறுதல் குறித்து ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்படும்.

(b) ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய பதவிகளுக்கு மாவட்ட அளவில் பணி மூப்பு பராமரிக்கப்படுவதால் இப்பதவியில் பணிபுரிவோர் மாவட்ட மாறுதல் கோர இயலாது. அவ்வாறு கோரும் பட்சத்தில் ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் இடைநிலை ஆசிரியராகவும், நடுநிலை தலைமை ஆசிரியர் பட்டதாரி ஆசிரியராகவும் பதவியிறக்கம் பெற எழுத்து மூலமாக சம்மதித்து கடிதம் அளித்த பின்பே அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும்.

(c) நிர்வாக காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் மாறுதல்களில், புகார்கள் அடிப்படை முகாந்திரம் இருந்தால் மட்டுமே மாறுதல் செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்பில் இது சார்பான விவரம் பதிவு செய்யப்பட வேண்டும். பொது மாறுதல்களுக்குப் பின் நிர்வாகக் காரணங்களுக்காக மாறுதல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அனைத்து ஆதாரங்களுடன் உரிய முன்மொழிவை ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். இயக்குநராலே முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு அவசியம் என அறியப்பட்டால் இயக்குநரால் மாறுதல் ஆணை வழங்கப்படும். பொதுமாறுதல் கலந்தாய்வுக்குப் பின் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் எவ்வித மாறுதல் ஆணையும் வழங்கக்கூடாது. தவறும் பட்சத்தில் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(d) இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்/முதுகலை பட்டதாரி ஆசிரியர் நிலையில் புதிதாகப் பணியில் சேர்ந்தவர்கள் பணியில் சேர்ந்து இரண்டாண்டுகள் முடிந்த பின்னர் அவர்கள் மாறுதல் கோரும் பள்ளிகளில் மாவட்டத்தில் காலி இடம் இருப்பின் மாறுதல் செய்யப்படலாம்.

(e) ஏற்கனவே புகார் மீது நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள் இரண்டு ஆண்டுகள் கழித்து விண்ணப்பிக்கலாம். ஆயினும், ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக்கூடாது

(f) கோரிக்கையின் அடிப்படையில் மாறுதல் பெற்றவர்கள், குறைந்த பட்சம் ஒரு ஆண்டுக்கு மாறுதல் கோர இயலாது. பதவி உயர்வு பெற்றுச் சென்றவர்கள் சொந்த மாவட்டத்தில் பணிக்குறைப்பு காரணமாக வேறு மாவட்டத்திற்கு சென்றவர்கள் ஆகியவர்களுக்கு இந்த குறைந்த பட்ச கால அளவு பொருந்தாது.

(g) மனமொத்த மாறுதல்களைப் பொருத்தமட்டில், கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் செய்து முடிக்க வேண்டும்.

(h) மனமொத்த மாறுதலில் ஏற்கனவே பயனடைந்தவர் திரும்பவும் அதே இடத்திற்கு மீண்டும் மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்க கூடாது. மனமொத்த மாறுதல்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் தற்போது பணிபுரியும் பள்ளியில் ஓராண்டு பணிக்காலத்தை கட்டாயம் முடித்திருக்க வேண்டும்.

(i) ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பட்டதாரி/ இடைநிலை காப்பாளராக 3 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்கள் மீது புகார்கள் ஏதும் வரப்பெற்றால் புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு புகார் உண்மையென கண்டறியப்பட்டால் அவர்களை விடுதி பொறுப்பு இல்லாத வேறு பள்ளிகளுக்கு பணியிட மாறுதல் செய்யலாம்.

(j) ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு காப்பாளினிகள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் காப்பாளர்களை நியமிக்கக் கூடாது. காப்பாளர்களுக்கு மாணவியர் விடுதிகளில் கூடுதல் பொறுப்பும் வழங்கக் கூடாது.

(k) சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை குறைவாகவும், பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளது. சில மாவட்டங்களில் விடுதிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது. எனவே, 3 ஆண்டுகள் தொடர்ந்து விடுதிகளில் பணிபுரிந்த காப்பாளர் / காப்பாளினிகளை பள்ளிகளில் ஆசிரியராக பணியிட மாறுதல் செய்யப்படுகின்ற நேர்வில் நிர்வாக ரீதியாக ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு பணியிட மாறுதல் வழங்கலாம். காப்பாளர்கள் / காப்பாளினியாக மூன்றாண்டுகள் பணி காலத்தை அவர்கள் காப்பாளர் / காப்பாளினியாக பணியில் சேர்ந்த நாளினை கணக்கில் எடுத்து கொள்ளாமல் மூன்று கல்வியாண்டுகள் முடிந்ததை அடிப்படையாக கொள்ள வேண்டும்.

(l) பொறுப்பு காப்பாளர் / காப்பாளினி நியமனங்கள் மற்றும் மாற்றுப்பணி நியமனங்கள் நேர்வில் தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் உரிய முன்மொழிவுகளைஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுப்பி இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஆணை வழங்குதல் கூடாது.

(m) மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை மேற்கண்ட விவரங்களின்படி முன்னுரிமை பட்டியல் தயாரித்து அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்தாய்வுக்கு (Counselling) வரவழைத்து அவர்களிடம் தகுதியுள்ள காலிப் பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கும் போது மாறுதலால் ஏற்படும் காலிப் பணியிடத்தையும் அவ்வப்போது பட்டியலில் சேர்த்து அடுத்து முன்னுரிமைப்படி வரும் ஆசிரியர்களின் விருப்பத்தினைப் பெற்று மாறுதல்கள் வழங்கப்பட வேண்டும். மேற்படி முறையால் விண்ணப்பத்தில் குறிப்பிடாத பள்ளிகளில் காலிப் பணியிடம் இருந்து அதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்தால் வழங்கலாம். மாறுதல் ஆணைகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்த விவரம் அறிவிப்புப் பலகையில் தெளிவாக வெளியிடப்பட வேண்டும்.

(n) 2002-2003-ஆம் அண்டு முதல் நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அவர்கள் நியமனம் பெற்ற மாவட்டத்தில் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நிலையில் வேறு மாவட்டத்திற்கு மாறுதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும்.

(o) கலந்தாய்வு நாளன்றே மாறுதல் உத்தரவு அளிக்கப்பட வேண்டும்.

(p) கலந்தாய்வின்போது இடையூறு விளைவிக்கும் அல்லது கலந்தாய்வை தடுக்கும் ஆசிரியர்கள்/இதர பணியாளரின் மீது தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(q) இத்துறையில் நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளில் நிரந்தரமாக காலியாகும் பணியிடங்களில் மாறுதல் மூலம் ஒரு முறை பட்டதாரி ஆசிரியரைக் கொண்டு நிரப்பப்பட்டவுடன் அப்பணியிடம் தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர் பணியிடமாகவே கருதப்படும்.

(r) ஆதிதிராவிடர் நலத்துறையை பொறுத்தமட்டில் ஆசிரியர் பணியிட மாறுதல்கள் கலந்தாய்வு (Counseling) முறையில் அவ்வாசிரியப் பெருமக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி மாறுதல் செய்யப்படுவதால் "மாறுதல் பயணப்படி" போன்ற எந்தவித செலவினமும் அரசுக்கு ஏற்படக் கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது, மேலும், அனைத்து பதவிகளுக்குமான கலந்தாய்வுகள் சென்னையில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் தலைமையில் உள்ள குழுவால் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

(s) சிறப்பு நிகழ்வுகள் எனக் கருதப்படும் இனங்களில், குறிப்பாக, ஓராசிரியர் பள்ளிகள் இல்லாமல் இருப்பதை நடைமுறைப்படுத்தவும், நிர்வாக ஒழுங்கிற்கு அவசியம் என கருதப்படும் நிலையில் நிர்வாக காரணங்களுக்காகவும் ஆதிதிராவிடர் நல இயக்குநரால் மாறுதல் ஆணைகள் வழங்கப்பட வேண்டும்.

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜா. தங்கம்
26.6.2023
பிரிவு அலுவலர்

26/6/23